# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**( அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./SC/ 7–19, 06–05–2010 நாளிட்டது )**

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டடதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பைக் குறித்துரைத்துள்ளது என்பதாலும், மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைத் திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தம், விதித்தொகுப்பினை நாளதுதேதி வரையிலானதாக்குவதற்கு, 26–06–2008 நாளிட்ட தமிழ்நாடு அரசின் எரிசக்தித் (B1) துறையின் அரசாணை பல்வகை எண்.78 கொண்ட அரசாணையின் வகைமுறைகளின் மறுபடியாக மட்டுமே இருப்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், (இதன்பின்பு இதில் முதன்மை விதித்தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை குறித்துரைக்கிறது, அதாவது :–

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

   a) இந்த விதித்தொகுப்பு, 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

b) இது, **26–06–2008** நாளிட்ட எரிசக்தித்(B**1**) துறையின் அரசாணை எண்.**78** நடைமுறைக்கு வந்த அதே தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**2. முதன்மை விதித்தொகுப்பின் 24ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல் :**

மின்சாரச் சட்டத்தின் **152**ஆம் பிரிவின் மறுபடியாகவுள்ள முதன்மை விதித்தொகுப்பின் **24**ஆம் ஒழுங்குமுறை விதியில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகின்றன :–

(i) முதன்மை விதித் தொகுப்பின் **24**ஆம் ஒழுங்குமுறைவிதியின் **(1)**ஆம் உள்–ஒழுங்குமுறை விதிக்குப் பதிலாகப் பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும் ; அதாவது :–

“ **(1)** குற்றங்களை இணக்கமாகத் தீர்த்தலானது மின்சாரச் சட்டத்தின் **152**ஆம் பிரிவிற்கிணங்க செய்யப்படுதல் வேண்டும் ”

(ii) முதன்மை விதித்தொகுப்பின் **24**ஆம் ஒழுங்குமுறைவிதியின் **(1)**ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

“**(2)** மின்சாரச் சட்டத்தின் **152**ஆம் பிரிவின் **(1)**ஆம் உட்பிரிவின் வரம்புரைக்கிணங்க இணக்கமாகத் தீர்ப்பதற்கான கட்டணத்தை தமிழ்நாடு அரசு அறிவிக்கை செய்துள்ள போது, அதேக் கட்டணவீதம் குற்றங்களை இணக்கமாகத் தீர்ப்பதற்கு பொருந்துதல் வேண்டும் ”

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**ரா. வெ. ராஜா**
செயலாளர்